விலை ரூபா 1-00 ★

வடஇலங்கைச் சதுரங்கக் கழக
நிதிக்காக
10-10-82 அன்று
நடைபெறவிருந்த
அபசுரம்
குருஷேத்திரோபதேசம்
நாடகங்கள் 1-11-82
வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெறும்.
செயலாளர்.
4788

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 24 ஜுலை 22 இதழ் 239
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10—10—82

லொறி விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 27 ஸ்ரீ 9416 இலக்க இசுசு லொறி விற்பனைக்கு உண்டு.

கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம்:-

V. M. சண்முகம்
No. 85. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [4770]

# வாக்களிக்க விடாது தடுத்தால் கைது!

## ஜனாதிபதித் தேர்தல் தின பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று வாக்களிக்க செல்லும் எவரையாவது தடுத்தால் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள்.**

எதிர்வரும் 20 ம் திகதி நடக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு நடைபெறும் நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வார்கள் வாக்களிப்புமுடிந்தபின்னர் நாடெங்கிலும் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டக்கூடிய வகையில் முப்படையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். நாட்டில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தினத் [8ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகர் விளையாட்டுவிழாவில் இன்று செல்வகௌரி கலந்துகொள்வார்



[யாழ்ப்பாண]

புதுடில்லியில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் சார்பில் 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ள விருக்கும் தமிழ் வீராங்கனையான திருமதி செல்வகௌரி வரதகுமார் இன்று யாழ் நகரில் இடம் பெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட்டுப்பிரி (8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி இன்று விளக்கும்

(யாழ்ப்பாணம்)

''ஜனாதிபதி தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலைஎன்ன?'' என்பது குறித்து விளக்கும் பொதுக்கூட்டமொன்று இன்று பிற்பகல் நல்லூர் எம் பியின் காரியாலத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் எம். பி. க்கள் திரு வெ. யோகேஸ்வரன் திரு. ஆ மு. ஆலாலசுந்தரம் உட்பட பலர் உரை நிகழ்த்துவர். (மா)

★ கடைசிநேரத்தில் ஹெலிகொப்டர் மறுப்பு

## 'உபாலி' சிறிய விமானத்தில் இன்று கொப்பேகடுவ யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் ஜனாதிபதி தேர்தல் பிரசார வேலையில் ஈடுபடுவதற்கு இன்று இங்கு வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு ஹெலிகொப்டர் பாவிப்பதற்கு கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து உபாலியின் தனிப்பட்ட சிறிய விமானமொன்றில்இன்றுகாலை திரு ஹெக்டர் கொப்பேகடுவ பலாலி விமான நிலையம் வந்து சேருவார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் ஆறு பேருக்கும் தேர்தல் பிரசார வேலைகளை மேற்கொள்வதற்கு 'ஹெலிகொப்டர்' வாடகைக்கு விடப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

திரு. கொப்பேகடுவ தென் பகுதியில் சில இடங்களுக்கு ஹெலிகொப்டரில் சென்று பிரசாரம் செய்தார்.

ஹெலிகொப்டரில் இன்று வடபகுதிக்கு வருவதற்கும் அவர் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் ஹெலிகொப்டர் பாவிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

இன்று காலை 7 மணிக்கு பலாலி விமான நிலையம் வந்தடையும் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு அமோக வரவேற்பளிக்கப்படவுள்ளது. [மா]

## "அடக்குமுறைச் சட்டங்களை கொண்டுவந்தவர் ஜே. ஆர்"

### யாழ். நகரில் டாக்டர் கொல்வின்

[யாழ்ப்பாணம்]

''1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின் பயங்கரவாத அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்து மக்களை அடக்கி ஒடுக்கி இம்சைப் [8-ம் பக்கம் பார்க்க]

## இன்று யாழ். வரும் அமைச்சர் முஹமத்

[யாழ்ப்பாணம்]

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச் முஹமத் வடபகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு இன்று ஞாயிறு காலை விசேஷ புகையிரத வண்டியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அமைச்சர் அல்ஹாஜ் முஹமத் போக்குவரத்துச் சபையின் வடபகுதி தலைமை அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்வார். மற்றும் புகையிரத நிலையங்களுக்கும் சென்று பார்வையிடுவார். இன்று மாலையே கொழும்பு திரும்புகிறார். (மா)

YARL HALL
MAIN STREET, JAFFNA.
DAY CLASSES

சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய 5 நாட்களும்

காலை வகுப்பு:
காலை 6-30 தொடக்கம் 11-00 மணி வரை
ஆரம்பம்: நாளை 11-10-82 திங்கள் 6-30

மாலை வகுப்பு:
மாலை 1-15 தொடக்கம் 5-15 வரை
ஆரம்பம்: 14-10-82 வியாழன் 1-15
(4804)

VACANCIES

REPUTED FIRM IN JAFFNA DEALING IN MOTOR SPARES HAS VACANCIES IN THE FOLLOWING CATEGORIES:

1. MANAGER. (Male or Female) Minimum 5 years experience in similar capacity Should possess maturity and experience to operate independently.
   Salary: Rs. 1000/- per mensem inclusive of allowances.
2. ACCOUNTS CLERK/TYPIST (Male or Female) Minimum 5 years experience. Should be able to work independently.
   Salary: Rs. 700/- per mensem inclusive of allowances.
   Qualification: G. C. E. O/Level with credit in English.
3. VAN SALES REPRESENTATIVE. Minimum 5 years experience. Should be conversant in all three Languages. Outstation Sales Experience necessary.
   Salary: Rs. 750/- per mensem plus allowances and Commission.
4. SALESMAN. Minimum 5 years experience. Should have sound knowledge of BMC Peugeot and Volkswagen range of spares.
   Salary: Rs. 1500/- per mensem inclusive of allowances.
5. SALES APPRENTICE. Should have studied up to G. C. E. O/L.
   Age between 15 and 18.
   Salary: Rs. 300/- per mensem inclusive of allowances.

Applications close on 20th October, 1982. Apply in own handwriting giving full particulars together with copies of certificates in support of qualifications.

Advt. No: 4798 C/O Eelanadu Ltd, JAFFNA.
4798

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

6ஆம் தர பிரவேசப்பரீட்சை (யாழ்.மாவட்டம்) விண்ணப்ப முடிவு திகதி 25-10-82 பரீட்சைத் திகதி 20-11-82 பழைய வினாத்தாள்தொகுதி ரூபா 10/- கிடைக்கும் இடம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 4784

மாதகல்-இரண்டு, 15 பரப்பு தோட்டக்காணிகள் கிணறுகளுடன், ஒரு 18 பரப்புபனைக் காணி விற்பனைக்கு உண்டு கடிதமூலம் தொடர்புகொள்ளவும் மு. ஸ்ரீஸ்கந்தராஜா, 26, ரட்னகாரபிளேஸ், தெகிவளை. 4742

4 ஸ்ரீ பிந்திய இலக்கமுள்ள Volkswaggon VW 1300 உடன் விற்பனைக்குஉண்டு.தொடர்பு: திரு. M. வேலுப்பிள்ளை, விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. அல்லது திரு T. S. கதிர்காமநாதன் 71/16, சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 4794

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகாமையில் 2½பரப்பு காணியும், புதிய வீடும் தொடர்பு: R. சிவா, நெசவுசாலை ஒழுங்கை, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 4785

சங்கரத்தை நவாலி றோட்டில் துணைவிச்சந்திக்கு பத்திரகாளி கோயிலுக்கு அருகாமையில் 4½நிலப்பரப்புவிற்பனைக்கு உண்டு மேற்குறிப்பிட்ட காணிக்கு பாதையும் உண்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 4791 மே/பா. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 4791

ஜப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 12சிறி தொடரிலக்கங் கொண்ட நல்ல நிலையிலுள்ள Nissan Sunny Naps கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. உமாசங்கர் சட்டத்தரணி ஏழாலை மேற்கு, சுன்னாகம். 4786

ஒஸ்ரின் மொறிஸ், பொருட்கள் ஏற்றும் (Goods) டீசல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. பாலா, துரை ஐயா அவனியூ, அச்சுவேலி. போன்: 207 (4797)

நாச்சிமார் கோவிலடியில் (கேசாவில் பிள்ளையார் வீதியில்) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செல்லமுத்து காட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ், 173,ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4780)

நல்லூர் கல்விக்கந்தோருக்கு அருகாமையிலுள்ள செல்லர் றோட்டில் வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ச. வரதராஜன், 15, முருகேசர் லேன், நல்லூர். (4764)

**35 மி. மீ. சினிமா ஸ்லைற் புறெஜக்டர்**
சக்திவாய்ந்த லென்ஸ் ஸ்லைற்றுகள், மின்இணைப்புகளுடன் விலை ரூபா 140/- வெளிநாட்டு கலர் ஸ்லைற்றுகளும் விற்பனைக்குண்டு.
விபரங்கட்கு:
பேபி போட்டோ
சேர். பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
*இது ஓர் உள்ளூர் உற்பத்தி
4790

## தேவை

அனுபவம் வாய்ந்த பைண்டர் தேவை. நேரில் வரவும். சித்ரா அச்சகம், 310, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (4777)

Tourist Guest House நாடத்துவதற்கு சுண்டிக்குளி, சம்சரி எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு தேவை. R. மகேந்திரன், G. P. S. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (4778)

நல்ல வருமானமுள்ள கிறைண்டிங் மில் கைத்தொழில் ஆகியவற்றிற்கு பங்காளர் தேவை. முதலீடு தருபவர்கட்கு நல்ல வட்டி வழங்கப்படும். லோகராசா, 159/1,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4779)

யாழ் நகரிலுள்ள பிரபல நிறுவனத்திற்கு சனி, ஞாயிறு கிழமைகளில் நடனம், வயலின் கற்பிக்க தகுதி வாய்ந்த ஆசிரியை தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4783, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (4783)

எந் விதமான கணக்குகளும், உடன்கவனித்து ஆவன செய்துதருவோம். கடைகளிலும் பகுதி நேரமாக வேலை செய்து தருவோம் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் சபாபதி. 109/4, சட்டநாதி வீதி, நல்லூர். 4789

யாழ் நகர், அல்லது சுற்றுடலில் சகலவசதியுடன்(மின்சார, பைப் வசதிகளுடன்) வீடு உடன் வாடகைக்கு, குத்தகைக்கு தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் மு. ஸ்ரீஸ்கந்தராஜா, 26, ரட்னகார பிளேஸ்,தெகிவளை 4743

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், தொழில், கல்வி, திருமணம் முதலியன. குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K. L. M. Krishnapillaiy, ஸ்ரீ பராசக்தி சோதிடநிலையம், 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம், (4772)

## WANTED

Wanted an experienced Accounts Clerk, with good handwriting and English knowledge, retired govern. ment servant too can apply– Salary negotiable. Apply in own handwriting to V. Srisakthivel, 601, K. K. S. Road, Jaffna. 4792

## வாடகைக்கு

யாழ். நகரில் மாணவிகளுக்கு சாப்பாட்டுடனும் சகல வசதிகளுடனும் தங்குவதற்கு இடமுண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், தடன்லட ஸ்ரோர்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4775

நல்லூர்தொகுதியில்போக்குவரத்து வசதிக்கேற்ப, சகல வசதிகளுடன் அறைவாடகைக்கு உண்டு. 20 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 4793 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். 4793

உங்கள் சகலவித கொண்டாட்டங்களுக்கும் தேவையான தறப்பாள் (கன்வஸ் கூடார துணி) வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் றஞ்சித் கதிரை வாடகை நிலையம், 16, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். 4796

4 அறைகள் கொண்ட புதிய வீடு சகல வசதியுடன், யாழ். மாநகர எல்லைக்குள் ஆறுகால் மடத்தடியில் 2½ பரப்புக்காணியுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: த. பொன்னம்பலம், பழம்வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. 4757

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் பயிற்சி 25-10-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4771)

றேடியோ — டெலிவிஷன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சிகள் Spoken English ரெலெக்ஸ் Hotel Management பயிற்சிகளிற்கும் 10-10-82 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். விபரங்களுக்கு: The School of Computer Studies, 52, கனகரத்தினம் கட்டிடம் மேல் மாடி, வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி,ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4741)

## வகுப்புகள்

Scientific cutting, Hair-Style and Beauty Treatment, Cake Making, Icing and Decoration ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்புக்களில் சேரவிரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் (10-3) மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும். குறுகியகால வகுப்புகளுமுண்டு. The Ladies Academy, வேம்படி மகளிர் கல்லூரிச்கு முன்பாக, 4, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 4249.

## சபிண்டீகரணக் கிரியை அழைப்பு

அன்புடையீர்!
சரசாலை வடக்கு தொழில்நுட்ப உதவியாளர்
அமரர் செ. சிவசுப்பிரமணியம் அவர்களின்
ஆத்மசாந்திக்காக
சபிண்டீகரணக்கிரியை 13-10-82 புதன்கிழமை பகல் 9 மணி தொடக்கம் நடைபெறும். அதிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் சமுகம் கொடுத்து உதவிகள் பற்பலசெய்து சிறப்பித்தஉறவினர்,நண்பர்கள் ஊரவர்கள், திணைக்களத்தினர், அனுதாபச்செய்திகள் அனுப்பியோர், மலர் வளையம், சாந்தி அஞ்சலி செலுத்தியோர் ஆகிய அனைவர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

இங்ஙனம்
பெற்றோர், சகோதரர், மனைவி, மக்கள்.
சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (4746)


BAYER

மிளகாய், தக்காளி, புகையிலை, காய்கறிவகை
நாற்று மேடைகளில் அடி அழுகலை அறவே தடுக்க,
நாற்று மேடை தொற்று நீக்கி
**மோறுட்** பாவியுங்கள்
நோயற்ற நாற்றுகளை பெற ஒரே வழி மோறுட்
மேற்கு ஜேர்மன் பாயர் தயாரிப்பு மோறுட்
இலங்கையில் தயாரிப்பாளர்:
**ஹேகெம் லிமிட்டெட்,**
400, டீன்ஸ் றோட், கொழும்பு 10.
(4721)


## தேவை

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார்
ஸ்ரீ தேவஸ்தானத்துக்கு

1. ஆசாரிய அபிடேகம் பெற்ற கோயில் அர்ச்சகர் தேவை. சிறந்த ஒழுக்கம் அனுபவமுடையவராய் இருக்கவேண்டும். குருகுல தேர்ச்சிப் பத்திரம் விரும்பத்தக்கது. நிருவாக நியந்தனைகளுக்கு கட்டுப்படவேண்டும். கடைசியாக இருந்த கோயில், எதிர்பார்க்கும் சம்பளம் குறிப்பிட்டு இரண்டு பிரபல குருக்கள்மாரிடமிருந்து அத்தாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்க.
2. மகோற்சவ காலத்திலும் விசேட தினங்களிலும் வாசிப்பதற்கு நித்திய மேளம் தேவை. உள்ளூர் வித்துவான்களுக்கு முன்னுரிமை உண்டு.

விண்ணப்பிக்கும் விலாசம்;
க. அருணசலம்,
பரிபாலனசபைத் தலைவர்,
மகாகணபதிப் பிள்ளையார் தேவஸ்தானம்,
சித்தன்கேணி.
சி. நவரத்தினம்,
9-10-82 செயலாளர். (4795)


## விற்பனைக்கு

இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன
2 **SHERPA** வான் 240 டீசல்
மொறிஸ் ஒக்ஸ்போட் எஞ்சின்
(முழுமையான கியர்பொக்சுடன்) (STANDARD SIZE)
மொறிஸ்மைனர் எஞ்சின்
(கியர்பொக்சுடன்) (STANDARD SIZE)
மொறிஸ்மைனர் உதிரிப்பாகங்கள்
**10K VA** உள்ள லிஸ்ரர் ஜெனறேற்றர்
6 முதல் 10 H Pக்கு மாற்றக்கூடிய
லிஸ்ரர் என்ஜின்
1.3- H P மோட்டோஸ்
தொடர்பு கொள்க:
**பைசன் றேடேஸ்**
**BISON TRADERS**
சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பு.
(4736)


## Vacancies in the Finance Company Ltd., Jaffna Branch

(1) POST OF RECOVERIES OFFICER:
We require a young, honest and energetic person to assist in recoveries. Experience in Court work will be an added qualification.
Salary negotiable.
Transport provided.

(2) GENERAL CLERK:
We require a young and energetic person with knowledge of typing, to assist the Legal Officer.
Salary negotiable.
Apply giving Bio data with 2 referees before 15th October 1982, to reach:

The Legal Officer,
**The Finance Company Ltd.,**
249 C, Power House Road,
Jaffna.

# போலந்தின் 'சொலிடாறிற்றி' தொழிற்சங்கம் கலைக்கப்பட்டது

## ஏனைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி

வார்சோ, அக்9

போலந்தின் சுதந்திர சொலிடாறிற்றி தொழிற்சங்கம் அந்நாட்டின் பாராளுமன்றத்தினுல் கலைக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது.

இச்சட்டமூலம் போலந்தினுள்ள அனைத்து தொழிற்சங்க இயக்கங்களையும் கலைப்பதுடன், புதிய தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது,

சொலிடாறிற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் இச்சட்டத்தை மதிக்கப் போவதில்லையென்று தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் இச்சட்டத்தைக் கண்டித்துள்ளன.

சுதந்திர சொலிடாறிற்றி தொழிற்சங்கம் போலந்திலுள்ள லெனின் கப்பல் கட்டும் கூடத்தில் 26 மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் போலந்தில் இராணுவ ஆட்சி அமுல் படுத்தப்பட்டதையடுத்து இத்தொழிற் சங்கத்தின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

கிழக்கு ஆபிரிக்க நாடு ஒன்றில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முதலாவது நடவடிக்கையாக இது அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்,

போலந்து பாராளுமன்றத்துள்ள 460 பிரதிநிதிகளில்100 பேர் சட்டமூலம் வாக்கெடுப்பிற்கு விட்ட போது சமுகமளித்திருக்கவில்லை. 12 பேர் இச்சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தனர். 9 பேர் பாராளுமன்றத்தில் சமுகமளித்திருந்தும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

போலந்து சுதந்கிர சொலிட்டாறிற்றி தொழிற்சங்கத்தலைவர் திரு, வலசா தற்போது சிறைக்காவலிலிருந்து வருவது தெரிந்ததே. (வெ

## இந்த ஆண்டு பல்கலைக்கழக மாணவருக்கு 1,000 புலமைப் பரிசில்கள்

(கொழும்பு)

இந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களில் 5பேருக்கு ஒன்று என்ற அடிப்படையில் 1,000 மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்தார்.

கொடைவள்ளல்களினுல்

[6–ம் பக்கம் பார்க்க]

## அவுஸ்திரேலியா முன்னணியில்

லண்டன், அக். 9

அவுஸ்திரேலியாவில்நடைபெற்றுவரும்பொதுநலவாய அமைப்புநாடுகளின் விளையாட்டுப் போட்டியில் அவுஸ்திரேலியா 104பதக்கங்களைப்பெற்று முன்னணியிலுள்ளது. (வெ)

## "இயற்கைக்கு மாறுன முறையில் மரணமானவர்களே அதிகம் மறுபிறவி எடுக்கிருர்கள்"

### அமெரிக்க உளவியல் நிபுணர் கூறுகிருர்

[கொழும்பு]

"வன்செயலின் போதும், இயற்கைக்கு மாறுன முறையிலும் மரணமானவர்களே இலங்கையில் அதிகமாக மறுபிறவி எடுத்துள்ளார்கள்."

இவ்வாறு இலங்கை வந்துள்ள அமெரிக்க வேர்ஜினியா பல்கலைக்கழகத்தின் உளவியல் நிபுணர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது!

"விஷப்பாம்புக் கடியினுலும், நீரில் மூழ்கியும், வீதி விபத்துக்களினுலும் மரணமான 140க்கும் அதிகமானவர்கள் இலங்கையில் மறுபிறவி எடுத்துள்ளனர்.

"மறுபிறவி எடுப்பவர்களில் 50 சத வீதத்திற்கு மதிகமானவர்கள் இயற்கைக்கு மாறுன முறையில் மரணமானவர்களாவார்."

இந்த அமெரிக்க உளவியல் நிபுணர் மறுபிறப்புப்பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். [வெ]

## அதிகார துஷ்பிரயோகம் இருவர் பதவி நீக்கம்

லண்டன், அக். 9

ரூமேனியாவின் அரசாங்க நிர்வாகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்த இருவர்அதிகார துஷ்பிரயோககுற்றச்சாட்டின் பேரில், கம்யூனிஸ்ட்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (வெ)

## ஸெயில்சிங் உடல்நிலை முன்னேற்றம்

வாஷிங்டன், அக். 9

இந்திய ஜனுதிபதி திரு ஸெயில்சிங் உடல்நிலை சத்திர சிகிச்சைக்குப்பின் முன்னேற்றமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தற்பொழுது இந்திய ஜனுதிபதி சத்திரசிகிச்சைக்குப் பின் ஹூஸ்டன் டெக்ஸாஸ்இருதய தோய் மருத்துவ கழகத்தின் தீவிரகண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் ஓய்வுபெற்று வருகின்ருர்.

இவர் இரு வாரங்களில் மருத்துவமனையைவிட்டு வெளியேறுவாரெனக் கூறப்பட்டது. [உ

## ஐந்தாவது இடத்தில் இந்தியா

லண்டன், அக். 9

அவுஸ்திரேலியாவில் நடைபெறும்பொதுநலவாய அமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் இந்தியா பதக்கம்பெறும்நாடுகளின் வரிசையில் 12வதுஇடத்திலிருந்து 5வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தியாவுக்கு இதுவரை தங்கப் பதக்கங்கள் 4, வெள்ளிப் பதக்கங்கள் 3, வெண்கலப் பதக்கங்கள் 1 கிடைத்துள்ளது. (உ


நாளாந்தம் காலை வேளை உலகெங்கணும்

கோடிக்கணக்கான ஆண்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுவது

BiC 'பிக்'

முகச்சவர இன்பம் பெறவே.

(B)பிக் சவரக் கருவியுடன் இணைந்துள்ள அலகு துரிதமான, முழுமையான செலவுச் சிக்கனமான சவரத்திற்குரியது.

சவரமுறையில் முன்னேறிய தொழில் நுட்பம். ஒவ்வொரு அலகும் குரோம் பிளற்றின துருப்பிடிக்காத உருக்கிலாக்கப்பட்டு சுகமான,மிருதுவான சவரம் தருவதற்கென்றே பொலிமர் பூச்சு பூசப்பட்டுள்ளது.

ரூ. 3'30



சவர அலகினைப் பொருத்தும் நீக்கும் சிரமமில்லை.

மிருதுவான திருப்திகரமான சவரத்திற்கென்றே (B) பிக்கில் அலகு சரியான கோணத்தில் நிரந்தரமாகப் பொருத்தப் பட்டுள்ளது.

(B) பிக் இலேசான கையடக்கமுடையது.

(B)பிக், உடனடிச் சவரத்திற்கு எப்பொழுதும் தயாராக இருக்கும்.

(B)பிக், பணத்தை, தோற்றத்தை, நேரத்தைப் பொன் போலப் போற்றும் ஆண்களுக்குரியது.

இக் குறிப்பிடத்தக்க இலகுவான (B)பிக் சகல கடைகளிலும் கிடைக்கும். விலை ருபா. 3/30 மட்டுமே. 5 சவரக்கருவிகள் அடங்கிய வசதியான பெட்டிகளிற் கிடைக்கும்.

அலகுமுனைகள் மூடிகளுடன் வருகின்றன, அவைகளின்றி ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

ஏனைய உலக மாந்தருடன் சேர்ந்து (B)பிக் கொண்டு சவரம் செய்யுங்கள்.

இறக்குமதி,விநியோகம்:

db டார்லிபட்லா அன்ட் கொம்பனி லிமிட்டெட்.

MASTERS DK 19/82

## யாழ்ப்பாணத்தின் மூன்று கண்கள்

# நாவலர் வகுத்த ஐந்தாண்டுத் திட்டம்

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(நேற்றைய தொடர்ச்சி)

குழந்தைகள் தம் மத உண்மைகளை அறியாமலிருக்கச் செய்வதே பாதிரிமாரின்முதற் படிவேலை. தம்மத உண்மைகளை அறியாதவர்கள் எந்தப் பக்கத்துக்கும் வளைவார்கள். அவர்களின் சந்ததி வயிற்றுச் சோற்றின் வழிச்செல்லும். இந்த அடிப்படையில பாடத் திட்டத்தைப் பாதிரிமார்கள் ஆக்கிக்கொண்டார்கள். ஒரு பிள்ளையின் தந்தை கோயில் தோறும் புராணபடனஞ்செய்பவராயிருப்பார். தம் பிள்ளைகளின் அறிவு பாதிரி பள்ளிகளில் நாடோறும் குடிபோய்க் கொண்டிருப்பதை அவர் அறியமாட்டார். தம் பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி கிடைக்கிறதென்பது அவர் நம்பிக்கை. தாம் இறுதத வரிலைய உதவி நன்கொடையாகப் பெற்றுக்கொண்டு தம் பிள்ளைகளின் அறிவைச் சூனியம் செய்யும் அதிசூக்குக சூழ்ச்சியை யாரும் அறிவதில்லை. குரு விருமபியவர்களுத் தீஷைசெய்வார். தஷிணை பெற்றுக்கொள்வார் குருவின் பிள்ளைகளின் அறிவே சூனியமாவதைக் குரு அறிவதில்லை.

### நான் நல்ல உதாரணம்

பாதிரிமார் கிராமப் பள்ளிகள் மூலம்செய்த புண்ணிய கைங்கரியங்களுக்கு உதாரணந்தேடி வெகுதூரம் போக வேண்டியதில்லை. என்னையே எடுத்துக்கொள்ளலாம். எனக்குப் பத்தொன்பதாம் வயசு தொடங்கிவிட்டது வண்ணார் பண்ணைக்கு நாடகம் ஒன்று பார்க்கச்சென்ற எனக்கு, நாவலர் பாடசாலையை ஒருவர் காட்டினார் நான் 'நாவலர் இருக்கிறாரா?' என்று அவரைக் கேட்டுவிட்டேன். அதுவரை நாவலர் எழுதிய எந்தப் புஸ்தகத்தைப் பற்றியும் நான் அறிந்ததில்லை. இதற்கெல்லாம காரணம் என்ன?

என் தகைமை எப்படிப் பட்டது? உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் நாவலரிடப் படித்தவர்கள். சிதம்பரம் நாவலர் பாடசாலையில் நீண்டகாலம் தலைமையாசிரியர யிருந்தவர். அவர் எங்கள் நெருங்கிய உறவினர். அவர் வீடு எப்பொழுதும் கல்விக்கழகமாகவே இருக்கும். அயல் வீடு எங்கள் வீடு. பதினைராம் வயசு தொடக்கம் ஒரு வருடகாலம் உரையாசிரியர் வீட்டியேயே வசித்திருக்கிறேன்.

அங்கே அடிக்கடிகல்விமான்கள் வருவார்கள் மகாலிங்கசிவம் இனிக்கஇனிக்கக்கதை சொல்லுவார். அக்கதைகளை கேட்டிருக்கிறேன். இடையிடையே உரையாசிரியர் சிதம்பரத்திலிருந்து வருவதுண்டு. பெருங் கூட்டங்கூடும் கேளுங்கள், நைமிசாரணிய வாசிகளே! என்ற முறையில் கதை நடக்கும். நானும் என் தந்தையாரும் பங்குபற்றுவோம். என் தந்தையார் புராணக்கதைகள், பாரத, ராமாயணக்கதைகள் தெரிந்தவர், பொழுதுபோக்குக்குச் சொல்லிக்கொண்டிருப்பவர்.

தென்மராட்சியில் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணவர்கள் மூவர் பொன்னம்பலங்கள் இருந்தவர்கள். அவர்களின் திண்ணைப்பள்ளிக்குப் பல வருடகாலம் புத்தகம் சுமந்து அலைந்திருக்கிறேன். மூவருள் ஒருவர் இலங்கை மான்மியம், இராமநாத மான்மியம், அருணசல மான்மியம் பாடியவர். வெகு நல்லவர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையைப் பற்றி அவர் கதைசொல்லும் பொழுது வாயூறும். இவருடன் எனக்கு மூன்றுவருடகாலம் கழிந்தது. இத்தகைய தகமைப்பாடுகள் இருந்தும் நாவலர் இருக்கிறாரா என்று 19ம் வயசில் வினவியிருக்கிறேன்.

நான் நாவலரை வினவிய அதே ஆண்டில், சில மாசங்களின்பின், நாவலர்பாடசாலையில் ஒரு நேர்முகப் பரீட்சை நடந்தது. வளர்ந்தோர் பலர் வந்திருந்தார்கள். நானும் போய்ச்சேர்ந்தேன், என்முறை வந்தது. சுன்னுகம் ஸ்ரீமதி அ. குமாரசாமிப்புலவர் அவர்கள் என்னை ஏற இறங்கிப் பார்த்துவிட்டுச் சிலகேள்விகள் கேட்டார்கள். சிறிதும் அஞ்சாமற் பதில் சொன்னேன். 'கிறிஸ்த பள்ளியில் படித்ததோ? என்று கேட்டுவிட்டுப் பெருமூச்சு விட்டார்கள் புலவர் அவர்கள். எனது அறிவு குடிபோனதன் மூல காரணத்தை நான் வாய்திறந்த அக்கணமே புலவர் அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். என்னை அங்குகொண்டுவந்து நிறுத்தியவர் என் அருமந்த அன்பர், அண்மையில் மறைந்த திரு. வே. நடராஜா அவர்கள் உரையாசிரியர்ன்கனிஷ்ட புத்திரர் அவர். அவருக்கு என்னிலை குறித்து முகம்வியர்த்தது.

பத்துவயசுவரை அமெரிக்க மிஷன் பாடசாலையிற் கிறிஸ்த பாலபாடங்களும், ஞானப்பால் வேதவிஞவிடை, மார்க்கு எழுதின சுவிசேஷம் என்றகிறிஸ்த சமய புத்தகங்களும் படித்ததனுல் என் அறிவுக்கு வந்த நோயை, மூன்றுபொன்னம்பல உபாத்தியாயர்களோ மற்றெவர்களோ அறியவில்லை. புலவர் அவர்கள் ஒரு நிமிஷத்திற் கண்டுகொண்டார்கள். என்னிலையிலிருந்து சாதாரண கிராமப்பிள்ளைகளின் நிலையை ஊகிக்கலாம்.

### நாவலர் கருத்துக்கள் சில:

''ஒரு சமயத்தாருடைய பொருளைக்கொண்டு அவர் மனசிலே மெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்குவிளைவிப்பதும், பொய்யெனப் பதிந்த சமயத்தை அவரைக்கொண்டு அவர் மனசுக்கு விரோதமாகவும் வலாற்காரமாகவுந்தழுவுவிப்பதும் அநீதி அநீதி!''

பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிபபிக்கிற உபாத்தியாயர்கள் தமிழை நன்ருக கற்றுக்கொண்டவர்களல்லர்; அவர்களிற் பெரும்பான்மையோர் சம்பளநிமித்தம் கிறிஸ்து சமயத்திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாருத்தியோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலானவை சுத்தத் தமிழ்நடையின்றி இலக்கணப்பிழைகளினல் நிறைந்தவைகளும் சைவ தூஷணங்களினல் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்திலும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்றார்கள். பேசுந்தமிழோ அந்நிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத்தமிழ்''

''உங்கள் கைப்பொருளையே இறுத்து உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அழித்துவிட்டுப் போய்ச்சிவதூஷணபுத்தகங்களைப் படிக்கவும் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகின்றீர்கள்.

''உங்கள் சமயத்தைப் பாதிரிமார் கண்டிக்கும்பொழுது அவர்களை எதிர்த்து அவர்கள் சமயத்தைக் கண்டித்து உங்கள் சமயத்தை நிறுத்தத் தொடங்குகின்ருர்களா? உங்கள் குருமார்களுள் யாதொருவரேனும் எப்பொழுதாயினும் உங்களுள் யாதொருவரையேனும் பார்த்து 'நீகொலை செய்யாதே களவெடாதே; மதுபானம் பண்ணுதே; மமிசம்புசியாதே பொய் பேசாதே, விபச்சாரம் செய்யாதே, சூதாடாதேஎன்று வாய் திறந்ததுண்டா?''

''பரீட்சை சிறிதும் வேண்டாத உத்தியோகமாவது, உலகமுழுதாலும் அரசரும் பெருத வந்தனுதிகளைப் பெறும் மிக மேன்மைபெற்ற உத்தியோகமாகிய சைவசமய குருவித்தியோகம் ஒன்றேயாய் முடிந்ததே. இஃது என்னையென்ன, கொடுமை, கொடுமை''

''உங்கள் குருமாருள்ளே கல்வியும், நல்லொழுக்கமும் உடையவர் சிலர் உளரேயாயினும் அவர்கள் தங்கள் கடமையை உங்களுக்கு எவ்வளவேனுஞ் செய்யக்காணேமே''

''கல்வியறிவொழுக்கங்களினுற் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்குக்குருமாராக ஏற்படுத்திக்கொள்ளுங்கள்''.

'ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுக்குள்ளே கல்வியறிவொழுங்கங்களிற் சிறந்த மோலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களிலே அனுப்பி லௌகீக நூல்களையும், நீதிநூல்களையும்சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக் கல்வி விசாரணைத் தலைமைத்துரைக்கு விண்ணப்பமெழுதிக் கவர்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று லௌகீக நூற்கருவியை விருத்தி செய்யுங்கள். அதற்குப் பாதிரிமார்கள் இடையூறு செய்யின் நீங்களெல்லாந்திரண்டு கொழும்புச் கவர்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதி கொள்ளுங்கள். அதற்குக் கொழும்பு கவர்மெண்டார் பராமுகர்களாயிருப்பின் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். இந்தியாவையாளும் இங்கிலாந்துக்கவர்ண்மெண்டாரே இலங்கையையும் ஆளுகின்றனர். இந்தியாவிற்குடிகளனுப்பும் விண்ணப்பங்களைச் சீர்தூக்கிப்பார்த்து அவர்களுக்கு நன்மை செய்யும் கவர்ண்மெண்டார், இலங்கையிற் குடிகள் விண்ணப்பம் அனுப்பினல், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மைசெய்யாது விடுவார்களா? குற்றம் உங்களிடத்ததேயன்றிக் கவர்ண்மெண்டாரிடத்ததன்று''.

இவை பாழ்ப்பாணத்துச் சமய நிலையிலிருந்து துளித்த வெம்மைத்துளிகள் சில. நமது சமயநிலை பற்றி நாவலருக்கு எழுந்த இருதயக் கொதிபபே, 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற புத்தகம்.

### நாவலர் திட்டம்

கொலைகளிற் பொல்லாத கொலை அறிவுக்கொலை. அதுவும் பிஞ்சுகளான குழந்தைகளின் அறிவு மூளையை நசுக்குவது அதிபாதகங்களுள்வைத்து அதிபாதகமாம் இந்த அதர்மச் செயலை பழுத்த மூட நம்பிக்கையினுற் செய்து வருவாராயினுர்கள், பாதிரிமார்கள். இந்த அநீதிச் செயலை ஓர் ஆறுமுகநாவலருக்கு உணர்த்தியருளினுர் கடவுள் பதினுன்குவருடம் கிறிஸ்தவசூழலில்இருக்கச் செய்த உணர்த்தியருளினுர்.

நாவலருக்குப் படிக்கும் போதே கண்ணீர் பெருக்கெடுத்தது. இருதயம் எத்தனையோ திட்டங்களைக் கற்பனை செய்தது. முக்கியமான தொரு திட்டம் வளர்ந்தபின் எழுத்திலும் வந்தது. அது ஐந்தாண்டுததிட்டம்.

### ஐந்தாண்டுத் திட்டம்

ஆரோக்கியம், ஒழுக்கம், விவேகம் முதலியன அமைந்த பிள்ளைகளைப் பரீட்சை மூலம் தெரிந்தெடுத்து, ஐந்தாண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# லண்டனில் தண்ணீர் பிரச்னை இல்லை!

## நெஞ்சம் மறவா நினைவுகள்-12

## ராஜகோபால்

தண்ணீர்! தண்ணீர்!

நம்நாட்டில் இது பல இடங்களில் பெரியதொரு பிரச்னை இந்தியாவில் நம்மைவிடப் பெரிய பிரச்னை!

ஒரு குடம் தண்ணீருக்குக் 'கியூ' நிற்கவேண்டிய பரிதாப நிலை!

பாலச்சந்தர் இதனைக் 'கருவாகக்கொண்டுபடமொன்றை கூட எடுத்தார்!

ஆனல்—

லண்டனில், தண்ணீரைத் தேடுவாரில்லை!

ஐ ஆம் சாரி, நான் குறிப்பிடுவது, நம்மைப்போல' குடக்கணக்கில் தண்ணீரைக் குடிப்பதைக் காணவில்லை!

களைத்தால்குடிப்போம், சாப்பிடும்போது குடிப்போம் சாப்பிட்டபின்னர் குடிப்போம், ஏன் எத்தனையோ பேர் பசித்தாலும்தண்ணீரைக் குடிக்கிருர்கள்! சாப்பிட்டு முடிந்தபின்னரும் அளவாகக்குடிக்கிருர்கள்!

இங்கு அனேகர்குடிக்க வேண்டுமென்பதற்காகக்குடிக்கிருர்கள். அங்கு 'என்ஜோய் பண்ணி நன்ருகச்சாடபிட வேண்டுமென்பதற்காகக்குடிக்கிருர்கள்.

கவலைக்காககுடிப்பதைநான் காணவில்லை. எந்தவிதமான 'பார்ட்டி'யென்ருலும் 'மது' இல்லாமல் இல்லை! ஆனுலும் பிரச்சனையில்லை!

இங்கு குடிக்கவேண்டுமென்பதற்காக 'பார்ட்டி'! அங்கு பார்ட்டியில் 'மது'ஒருஅம்சம்!

ஆடுகிருர்கள்! பாடுகிருர்கள்! அவ்வளவுதான்!

ஆனல், அங்கு—

சாப்பிடும்போது மதுபானம் சாப்பிட்டபின்னர்மதுபானம், இல்லாவிட்டால் பழரசம்!

நம்மவர்களைப்பற்றிச்சொல்லவில்லை! வெள்ளைக்காரர்களின் பழக்கம் இப்படி! அவர்களோடு சேர்ந்து நாமும் பழகிவிட்டோம்!

நமது சாப்பாட்டு மேசையில் முக்கியமாகத் தண்ணீர் இடம்பெறுமல்லவா! 'பிரக்கடித்து'விட்டால், தலையில் இரண்டடி அடித்துவிட்டு, இரண்டு முடறு தண்ணீரை உள்ளே செலுத்திவிடுகிறோம்! எல்லாம் சரியாகிவிடுகிறது!

வெள்ளைக்காரர்களுக்கு 'பிரக்கடிக்கிறதோ, இல்லையோ—

சாப்பிட்டுக்கொண்டே, பியரையோ. விஸ்கியையோ, அல்லது ஏதாவது ஒரு மதுபானத்தை வாய்க்குள் விடுகிருர்

தண்ணீர் என்றதும்—

குளிப்பது நினைவுக்குவருகிறது! நம்மைப்போல வெள்ளைக்காரர்கள் தினமும் குளிப்பதில்லை. குளிர நாடு என்பது மட்டும் காரணமல்ல— சம்மரோ வின்ரரோ, பச்சைத் தண்ணீரில் குளிக்கமுடியாது! 'பாத்ரூமில்' இருதண்ணீ[ரும்] உண்டு! நமக்கேற்றபடி இரு தண்ணீரையும் கலந்து அளவான சுடுநீரில் குளிக்கலாம்.

### நினைத்தபடி குளிக்க முடியாது

வீடுகளிலும்சரி, ஹோட்டல்களிலும் சரி. இங்குமாதிரி ஆனந்தமாக நம்மை மறந்து தண்ணீரில் குதித்து விளையாட முடியாது 'பாத்ரூம்' முழுவதும் ஈரமாக்கி அசிங்கமாக்கிவிடுவோம்.

'ரப்'புக்குள் இருந்து கொண்டு குளிக்கலாம் 'ரப்பை நிரப்பி விட்டுக்குளிக்கலாம்— நிதானமாகக் களிக்கவேண்டும்

இவை எல்லாவற்றையும் நான் லண்டன் சென்றடைந்ததுமே எனது நண்பர் சொல்லித்தந்தார்.

இலங்கையிலிருந்து லண்டன் வந்த வயதில் குறைந்த இளைஞர் ஒருவர்— வந்த புதிதில், கொழும்பு பக்கம்கூட போகாமல், நம் ஊர் கிணற்றடியில் 'செல்லமாகக்' குளித்துவளர்ந்தவர் 'ரப்'புக்குள் நிறைத்துவிட்டு வெளியே நின்று வாளியால் அள்ளி அள்ளித்தலையில் வார்த்து, வீடெல்லாம் தண்ணீர் மயமாக்கி, கீழே போட்டிருந்த கம்பளங்களையெல்லாம்வெள்ளயாக்கியகதையை ருசியாகச் சொல்லி எச்சரிக்கையும் செய்துவைத்தார். நண்பர்.

அது போகட்டும்—

வெள்ளைக்காரர்கள் குளிப்பதில் அக்கறையில்லாதவர்கள் 'தடிமல்'வந்துவிடுமென்ற ஒரு தப்பான பயம் தான் இதற்கு முக்கியகாரணம் என்பதை அறிந்தேன்.

எனக்குக்கூட என் அம்மாவும், மனைவியும் போட்டா போட்டியாக ''கண்டபடி குளிச்சுத்தடிமனை வாங்கிப் போடாதீங்க! அங்கு தடிமன் ஜலதோஷம் வந்தால் அதோகதிதான்! என்றுசொல்லிவைத்தார்கள்!

(5ம் பக்கம் பார்க்க)

# நாவலர் வகுத்த ஐந்தாண்டு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் ஊண், உடை யாவும் வழங்கிக் கற்பவை கற்பித்து, ஆண்டுதோறும் இருபதின்மரை வெளிப்படுத்துவதே அத்திட்டம். வெளியேறும் இருபதின்மரில் ஒரு பகுதியினர் கற்றுவல்ல உபாத்தியாயர்களாயிருப்பர். மற்றொரு பகுதியினர் சைவ போதகராயிருப்பர். ஊர்தோறுந் தோன்றுஞ்சைவப் பள்ளிக்கு உபாத்தியாயர்கள் அனுப்பப்படுவார்கள். போதகர்கள் கோயில்களின் சார்பில் போதனை செய்துகொண்டிருப்பார்கள்.

## நாவலர் உழைப்பு

குறித்த ஐந்தாண்டுத்திட்டம் பயன்படுதற்கு 23 வயசு தொடக்கம் நாவலர்பெருமான் உழைத்த உழைப்பே நாவலர் சரித்திரம்.

பச்சைக் குழந்தைகள் தொடக்கம் மகாபண்டிதர் பரியந்தமானவர்கள் தமிழையும் அதன் உயிர்ப்பாகிய சமயத்தையும் படிக்கிரமத்தில் விருத்திசெய்தற்கும் லௌகிக விருத்தியிற் செல்பவர்கள் ஓய்வு நேரங்களில் தம் அறிவைப் பேணுதற்கும் ஏற்ற வகையில் நூலுரைகள் செய்தும் அச்சிட்டும் நாவலர் உழைத்த உழைப்புக்கு எல்லையும் உண்டா?

## கற்றுவல்ல உபாத்தியாயர்

நாவலர் திட்டத்தில் சைவ போதகர்களை உற்பத்தி செய்யுந்திட்டத்துக்குப் பாதிரிமார் அஞ்சவில்லை. சாத்திர அறிவில்லாத கோயிலதிகாரிகள் குருமார் திருவிழா ரசிகர்கள் என்றிவர்கள் நாவலர் வழியில் நில்லார்கள் என்பதைப் பாதிரிமார்கள் நன்கு அறிவார்கள். அவர்கள் அஞ்சியதெல்லாம் கற்றுவல்ல உபாத்தியாயர்களை உற்பத்தி செய்யுந் திட்டத்துக்கேயாம். ஐந்தாண்டுத் திட்டம் முழு உருவங்கொள்ளுவதற்கு முன்னமே நாவலரின் சூழல் கற்றுவல்ல உபாத்தியாயர்கள் மயமாய்விட்டது.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளைக்கு விலையென்ன? அவர் நிற்குமிடம் நடக்குமிடமெல்லாம் கற்றுவல்லார் மயமாய் விளங்கின. காசிவாசி செந்திநாதையர், இணுவில் நடராசையர் முதலியோர் சித்தாந்த சரபங்கள். இவர்களெல்லாம் நாவலரின் மாணவராயின் கற்றுவல்ல உபாத்தியாயர்களுக்குப் பஞ்சம் ஏது? ஊர் தோறும் சைவப்பள்ளிகள் முளைகொள்ளும் வாய்ப்பு உண்டானது. இந்த நிலையில் நாவலருக்கு அழைப்பு வந்துவிட்டது. பாதிரிமார் நாவலர் மறைந்ததும் மற்றொரு சூழ்ச்சி செய்தார்கள்.

## பயிற்சி ஆசிரியர்

நாவலர் உபாத்தியாயர்களுக்குக் கொடுத்த ''கற்றுவல்ல'' என்ற அடைமொழியை எடுத்துவிட்டு, அந்த இடத்துக்குப் 'பயிற்றப்பட்ட தராதரப் பத்திரமுள்ள' என்ற அடையைச் சேர்க்கத்தக்க வகையில், பாதிரிமார் அரசியலதிகாரத்துடன் பாடத்திட்டத்தை அமைத்தார்கள். தராதரபத்திர ஆசிரியர்களை அச்சுப் போட்டு வெளிப்படுத்தும் பொறுப்பும் பாதிரிமார் கையிலானது.

## நாவலர் வித்தியாசாலையில் கிறிஸ்துமத ஆசிரியர்

நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கே மதமாற்றம் பெற்ற பயிற்றப்பட்ட ஒருவரே தலைமையாசிரியராகும் நிலை நேர்ந்தது. மறுத்தால் உதவி நன்கொடை பெற முடியாது. கற்றுவல்ல உபாத்தியாயர்களெல்லாம் விலையற்ற 'அன்செட்டிவிக்கற்' மாக்களாயினர். பெரும்பாலார் வேறு வேறு தொழில்களில் ஈடுபட்டார்கள். ஆங்காங்குத் தோன்றிய சைவப் பாடசாலைகள் பாதிரிமார்களிடமே ஒப்பிக்கப்பட்டன. பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏறியது. கிராமந்தோறும் சிறந்த பள்ளிகளிற் படிக்கும் பிள்ளைக்கும் நாவலருக்கும் என்ன சம்பந்தம்? நாவலர் எழுதியபுத்தகங்களை அவர்களறிவதெப்படி? 19 வயசில் நாவலரை நான் விசாரித்ததிற் புதுமையில்லை. இந்நிலையை நாவலரின் ஆத்மா சகிக்குமா?

## காவிய பாடசாலை

நாவலர் வழிவந்தோருக்கோ அவர் தருமத்தைப் பரிபாலிப்போருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. நாவலர் ஈட்டிவைத்த பொருள் கொண்டும் புத்தக வருமானங்கள் கொண்டும் காவிய பாடசாலை நடத்தினார்கள். அதன் மூலம் தமிழையும் சைவத்தையும் வளர்க்க முயன்றார்கள். வயிற்றுக்கு வழி செய்யாத படிப்பை யார் படிப்பார்கள்? எப்படியும் ஆங்கிலம் படிக்கும் மோகமே அதிகரித்துக்கொண்டிருந்தது.

## புதிய மனிதரின் போதனை

நாவலர் வித்தியாசாலைக் காவிய பாடசாலை உலகை தேய்ந்து உளிப்பிடியாகிற நிலை எய்தியது. அவ்வாறிருக்க காலந்தான் நான் போய்ச் சேர்ந்த காலம் ஒடுக்க காலம். என்னுடன் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராய் மெல்ல மெல்ல விலகிச் செல்லக் காவியவகுப்பில் நான் ஒருவனேயாயினேன். நாவலர் மறைந்து நாற்பதாம் வருடம் ஆகின்றது. ஒரு நாள் நான் படித்துக்கொண்டிருக்கும்போது என் படிப்பை விசாரித்துக் கொண்டு என் முன்னிலையில் ஒல்லியான ஒரு நாட்டுப்புற மனிதர் தோன்றினர். அவரது உடை விசேடமதிப்புச் செய்தற்கு இடந்தரவில்லை. முகம் சிந்தனைகள் நிறைந்ததாச் சிரித்தறியாததாயிருந்தது. நான் ஒன்றும் சொல்லாமலே அந்த மனிதர் சொல்லத் தொடங்கிவிட்டார். உன் படிப்புப் பயன்படவேண்டும் என்றால் உபாத்தியாயர்ப் பத்திரம் வேண்டும் பிள்ளை. இப்பொழுதைய நிலைமைகளை உணரவேண்டும்பிள்ளை, என்று தொடங்கி ஒரு பிரசங்கமே செய்துவிட்டார் மனிதர். நான் சற்றும் அசையவில்லை. 'உனக்கொன்றும் விளங்கவில்லைப் பிள்ளை' என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் போய்விட்டார். அந்த மனிதர் யார்?

(நாளை தொடரும்)

# லண்டனில் தண்ணீர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் குளிக்காமல் என்னால் இருக்க முடியவில்லை!

இங்கு தடிமல் வருவதில்லையா? அங்கும் ஒரு முறை வந்தது! லண்டனில் இருந்த என் உடன்பிறப்பும் பயந்தவன்! உள்ள மருந்தெல்லாவற்றையும் கொண்டுவந்து தந்தான்! அந்த மருந்தெல்லாவற்றையும் விட எனது தடிமனைப் போக்க வெள்ளைக்காரனது 'பானம்' தான் சிறந்த மருந்தாக இருந்தது என்பதை என் தம்பி பின்னர்தான் உணர்ந்தான்!

●

## நல்ல பண்பு

வெள்ளைக்காரர்களில் என்னை வெகுவாகக் கவர்ந்த பண்பு ஒன்றை நிச்சயம் உங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும்!

பெரியபெரிய நிறுவனங்களில் சில வற்றுக்கும் தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கும் அங்கிருந்த காலத்தில் செல்லக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது!

சம்பந்தப் பட்டவர்களுடன் நெருங்கியும்பழக வாய்ப்பு ஏற்பட்டது!

நமது நாடு ஏன் 'அந்த அளவுக்கு' முன்னேறவில்லை என்ற 'ரகசியம்' எனக்கு அப்போது தான் 'அப்பட்ட'மாக தெரியவந்தது!

வேலை என்றால் அங்கு வேலை தான்! உழைப்பவர்களைத் தான் அங்கு மதிக்கிறார்கள் திறமையும் உழைப்பையும் கண்டு, பதவி உயர்வைக் கொடுக்கிறார்கள் சம்பள உயர்வை வழங்குகிறார்கள்!

இதனால்—உற்பத்தி பெருகுகிறது: நிறுவனங்கள்தொழிற்சாலைகள் வளர்கின்றன! நாடு முன்னேறுகிறது ''பந்தம்'' என்றொரு கலை இருப்பதே அவர்களுக்குத் தெரியாது. அவரைப் பிடித்து இவரைப் பிடித்து 'காதுக்குள் ஓதி' கையுக்குள் வைத்த' அங்கு ஒன்று சொல்லி, முன்னேறுவதற்காக 'பந்தம்'என்ற கலையை அங்கு படிக்கவேண்டிய நிலை அறவேயில்லை.

–நேருக்கு நேராக எதையும் பேசித் தீர்த்துக் கொள்கிறார்கள்! வேலை செய்கிற இடத்தில் நிர்வாகியை கண்டுபேசினால்தான் சரி. வேறு இடத்தில் கண்டுபேசி 'விஷயத்தை முடிக்க முடியாது!

நேர்மையான உழைப்புக்குப் பலன் கிடைக்கிறது! இதனால் அங்கு உழைப்பை நேசிக்கிறார்கள். உழைப்பில் வெறுப்பு ஏற்படுவதில்லை யாருக்கும்!

நம் நாடும் வெள்ளையர்களை இவ்விஷயத்தில் பின்பற்றினால் நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும் என்பதை எனக்குள் அப்போது நினைத்துக்கொண்டேன்.

''அவன் வெள்ளையன்! வெள்ளைக்காரன் மாதிரி நிர்வாகம் நடாத்துகிறான்!'' என்று எல்லாம் இருக்கும்போது காதுகளில் விழுந்தவார்த்தைகளின் உண்மை அர்த்தத்தை லண்டனில் புரிந்து கொண்டேன்.

இந்தநாட்டில்–'காரியத்தை' முடிக்கவேண்டுமென்பதற்காக எப்படியெல்லாமோ கேவலமாக, அசிங்கமாக நடந்துகொள்கிறார்களே!

–திறமைக்கும், உழைப்புக்கும், நேர்மைக்கும் முதலிடம் கொடுக்கும்போதுதான் ஒரு நாட்டால் முன்னேற முடியும்.

இரண்டாவது உலகயுத்தத்துக்குமுன் புபடுமோசமான நிலையில் இருந்த பிரிட்டன், இன்று முன்னேறி இந்நிலைக்கு வந்ததற்கு இதுவே முக்கிய காரணம் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது!

★

## கவர்ந்த சில இடங்கள்

தம் எழுத்துக்களால் உலகத்தை மயங்கவைக்கும் வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த இடத்துக்கு சென்றது எனக்கு இன்னும் நினைவில் நிற்கிறது! அந்த உலக மகாகவியின் வீடு தேசிய சொத்தாக்கப்பட்டுள்ளது ஷேக்ஸ்பியர் பயன்படுத்தியபடியே அந்த வீடு இப்போதும் இருக்கிறது!

Startford upon Avon என்ற இந்தப் புனித ஸ்தலத்தில் ஷேக்ஸ்பியர்பிறந்ததினால் அதனால் அது ஒரு கலைக்கிராமமாகக் காட்சியளிக்கிறது!

மகாராணியாரின் பக்கிங்காம் மாளிகைக்குச் சென்று 'பல்கனி'யில் மகாராணியார் தரிசனம் தந்ததை நேரில் பார்த்ததைப் பாக்கியமாகக் கருதாவிட்டாலும், வேகமான முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட வெள்ளையர்கள் ஏன் தான் மகாராணியும், சார்ள்ஸும், டயானாவும் என்றால் 'பயபக்தியுடன்' அவர்கள் பெருமையைப்பாடுவதில் மகிழ்கிறார்கள் என்று தெரியவில்லை!

'இலக்கம் 10–டவுனிங் தெரு லண்டன்' என்றால் — அது பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வவாசஸ்தலம் என்று உலகமறியும். சாதாரண வீடுகளைப்போலவே காட்சியளிக்கிறது. திருமதி தாட்சரை நேரில் பார்ப்பதற்காக ஒரு மணி நேரம் வெளியே காத்து நின்று, மிடுக்காக அந்த குடும்பியில்லாத மனுஷியைப்பார்த்தேன்!

பழமை வாய்ந்த லண்டன் பாராளுமன்றக் கட்டடம், வலதுபுறத்தில் அமைந்திருக்கும் 'பிக்பென்', இடது கோடியில் அமைந்துள்ள வெஸ்ட் மினிஸ்டர் மாதாகோவில் 'டவர் பிரிட்ஜ்'– இப்படிப்பலப்பல...

# பாரதி நூற்றுண்டு விழா

[யாழ்ப்பாணம்]

தேசியகலை இலக்கியப்பேரவையும் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கமும் இணைந்து நடாத்தும் பாரதி நூற்றுண்டு விழா இன்று பிற்பகல் ஹட்டன் நகர மண்டபத்தில் திரு. எம். பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# ரூபா. 45, 000 ஒதுக்கீடு

[சாவகச்சேரி]

மீசாலை வடக்கு கிராமோதய சபைக்கூட்டம் தலைவர் சதா நடராசா தலைமையில் கூடியபோது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 45,000ரூபாவில் மீசாலை வயற்கரை வீதிக்கு 11,500 ரூபாவும் தட்டாங்குள வீதிக்கு 23,500 ரூபாவும் கோயிலாமனை வீதிக்கு 10,000 ரூபாவும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (க)


# தேவை

(1) **சாரதி**

வான் லைசென்சுடன் நல்ல மெக்கானிக் அறிவும் அனுபவமும் உள்ள சாரதி.

(2) **பெற்றோல் / டீசல் வாகன மெக்கானிக்**

தராதரமுள்ள மெக்கானிக் - பெற்றோல், டீசல் வாகனங்கள் பராமரிக்கும் பிரபல கராஜில் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவர்.

(3) **வெல்டர்**

மின்சார, காஸ் (GAS) வெல்டிங் செய்வதில் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். நன்கு பிரபல்யமான நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


தகமை, முன் அனுபவம் பற்றிய பூரண விபரங்கள், எதிர்பார்க்கும் சம்பளம், மற்றும் உறவினர் அல்லாத சான்று பகர்வோர் இருவர் பெயர்களுடன்

**த. பெ. எண்: 1199, கொழும்பு**

என்ற விலாசத்திற்கு சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.



யாழ்நகரில்
பலவகைப் பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சி தனிமாவட்ட கோரிக்கை

# "ஜனாதிபதி கவனத்தில் எடுப்பார் நானும் தூண்டுதலாக இருப்பேன்"

### விவசாய அதிகாரசபைத்தலைவர் கூறுகிறார்

[கிளிநொச்சி]

"கிளிநொச்சித் தொகுதி தனிமாவட்டமாகவேண்டியது மிகவும் அவசியமாகும்."

கிளிநொச்சிக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் திரு. றஞ்சன் விஜயரெத்தின மேற்கண்டவாறு கூறினார்.

ஆனந்தபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்திற்கு கிளிநொச்சி கமநல சேவைத் தலைவர் திரு. க. பாக்கியநேசர் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் திரு. றஞ்சன் விஜயரெத்தின மேலும் பேசுகையில்:–

"கிளிநொச்சித்தொகுதியையும் இங்குள்ள மக்களின் குறைகளையும் எனக்கு நன்கு தெரியும். யாழ் மாவட்டத்திலே அதிக பரப்பளவைக் கொண்டது இத்தொகுதியே 538 சதுரமைல் பரப்பைக்கொண்ட இத்தொகுதி யாழ். மாவட்டத்தின் அரைவாசிப் பகுதியைத் தன்னுள் கொண்ட பிரதேசமாகும். இத்தொகுதி எம். பி.க்கு ஒதுக்கும் 25 லட்சம் ரூபா தொகையில் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வது மிகக் கடினமாகும்

"சிறிய பரப்பளவைக் கொண்ட யாழ். குடாநாட்டின் ஏனைய தொகுதிகளிற்கு ஒதுக்கும் 25 லட்சரூபாவுடன் இத்தொகுதிக்கு ஒதுக்கும் பணத்தை நோக்கும்போது நியாயமற்ற செயலாகவே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் முன்வைத்துள்ள தனி மாவட்டக் கோரிக்கை மிகவும் நீதியானதும் நியாயமானதுமாகும். ஜனாதிபதி கவனத்தில் எடுப்பார். அதற்கு நானும் தூண்டுதலாக இருப்பேன்.

"கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்தி அடைவதற்கு கிராமிய ஒன்றிணைப்புத் திட்டத்தை இங்கு நடைமுறைப் படுத்தவேண்டும். இத்திட்டம் மன்னார், முல்லைத்தீவிலும் நடைமுறையில் உள்ளது.

"நமது ஜனாதிபதி எல்லோர் மீதும் நம்பிக்கை கொண்டவர். நம்பினோருக்குத் துரோகம் செய்யமனத்தாலும் நினையாதவர். அவரது கையை எல்லோரும் சேர்ந்து பலப்படுத்த வேண்டும். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் ஆறு ஆண்டுகளிற்கு ஜனாதிபதியாக இருப்பார். அதுவே எனது விருப்பம். அப்பொழுதுதான் நமது நாடு பொன்விளையும் பூமியாகும்" என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:–

"கிளிநொச்சி மக்கள் மத்தியில் திரு. றஞ்சன்விஜயரத்தின பெரிதும் அபிமானம் பெற்றவர். அவரது முயற்சியால் பல விவசாய முயற்சிகளிற்கு இப்பகுதியில் புத்தூக்கம்கொடுக்கப்பட்டுள்ளது. குளாய்க்கிணறு தோண்டுவதற்கான இயந்திரம் ஒன்றையும் எமக்கு வழங்கவும் அவர் முன்வந்துள்ளார். இத்தொகுதிக்கு ஒதுக்கும் பணத்தில் இருந்து எந்த வேலையையும் உருப்படியாகச் செய்யமுடியாது இதனால் மக்கள் மத்தியிலும் அதிகாரிகள் மத்தியிலும் குறை கேட்க வேண்டிய நிலையே எனக்கேற்பட்டுள்ளது" என்றார்.

சமூக சேவையாளர் திரு இ. கிறிஷ்ணராசா, கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவர் திரு. என் சுப்பிரமணியம், பளை பிரதேச சபை தலைவர் திரு. என்.எம். செல்வராசா, ஆனந்தபுரம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சூரியமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினார்கள். [க]

## "விழிப்புக் குழுக்களின் நோக்கம்"

(நயினாதீவு)

கிராமிய மட்டங்களில் ஏற்படும் சண்டை, சச்சரவு போன்ற பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்துவைக்கும் நோக்கமாகவே கிராமங்கள் தோறும் பொலிஸ் பொதுமக்கள் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அத்தகைய குழுக்கள் மீளாத் தூக்கத்தில் இருந்தால் அவற்றிற்குப் பதிலாக சமாதான சபையினை அமைப்பது அவசியமே. எனவே முதலில் பொலிஸ் பொதுமக்கள் விழிப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து உண்மையில் அவை மீளாத் தூக்கத்தில் இருக்கின்றனவா என்பதை அறிந்து அதன் பின்பே சமாதான சபையினை அமைப்பதுபற்றிச் சிந்திக்க வேண்டும்."

இவ்வாறு நயினாதீவு தெற்கு கிராமோதயசபையின் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட சமாதானசபை அமைப்பது தொடர்பான பிரேரணை மீது உரையாற்றிய ஸ்ரீ கணேச சனசமூக நிலையத் தலைவர் திரு. சோ. சந்திரசேகரம் குறிப்பிட்டார். [வெ]

## பல்கலைக்கழக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் பல்கலைக் கழக பிரவேசப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் புதிய கல்வி ஆண்டு இம்மாதம் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (வெ)

## ரூ. 5 லட்சம் கடத்தல் பொருட்கள் சிக்கின

சென்னை, அக். 9

லொறியொன்றில் கடத்திச் செல்லப்பட்ட 5 லட்சத்து 19,000 ரூபா பெறுமதியான துணிவகைகளும், ஆடம்பரப் பொருட்களும் தஞ்சாவூரில் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். [இவ]

## விக்டோரியா கல்லூரியின் சாதனை

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் விக்டோரியக் கல்லூரியிலிருந்து இந்த வருடமும் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவாகியிருப்பதை யிட்டு பலர் அக்கல்லூரி அதிபருக்கு பாரட்டுத் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலிருந்து முதன்முதலாக சென்ற வருடம் இரு மாணவர்கள் பல்கலைக்கழக மருத்துவப் பிரிவுக்கு தெரிவுசெய்யப்பட்டது தெரிந்ததே இந்த வருடமும் இருவர் மருத்துவப் பிரிவுக்கும் ஒருவர் பற்சிகிச்சைப் பிரிவுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்கல்லூரியிலிருந்து பொருளியல் பிரிவுக்கு ஒருவர், கட்டிடக்கலைப் பிரிவுக்கு ஒருவர், பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கு இருவர், உயிரியல் விஞ்

(7-ம் பக்கம் பார்க்க)

## சிவப்பேறு கண்ட செல்லையாசாமி

சைவநெறி சிவ சம்பந்தமானது. எனவே சிவசம்பந்தமுடையவர்கள் சைவசமயத்தினர். சைவ நெறியின் மிக உயர்ந்த நிலை அடியார்களைப் போற்றுதல் 'அப்பாலுமடி சார்ந்த அடியார்க்கு மடியேன்' என்பது சுந்தரர் வாக்கு. 'தொண்டர் தம்தொண்டர்க்கு மடியேன்' என்பதும் நம்வாழ்வார் சொன்ன முது மொழி. ஆம், இன்றும் உடல் கொடுதிரிவோரும், இனிமேலும் உயிர் கொடுவருவோரும், சென்ற காலத்தின் பழுதிலாத் திறமுணர்ந்து வாழ்ந்துபோன மெய்யடியார்களும் இந்த வரிசையிலே அடங்குவர். அவர்களைப் போற்றுவது நம் கடன்.

அவ்வாறான பழவடியார்கூட்டத்திலே ஒருவராய் வாழ்ந்த ஆத்மீகச் செல்வர் தான் தவத்திரு செல்லையா ஜோதிடர். தென் புலோலியிலே பிறந்து புற்றளைப்பிள்ளையாரைக் குல தெய்வமாய்க்கொண்ட இவர் கந்த முருகேசன், கார்த்திகேயன் போன்ற பெரியார்களை அண்டிக் கலைஞானம்பெற்றார். நித்திய பிரமச்சாரியத்தை அனுஷ்டித்துப் பிற்காலத்தில் வல்லிபுரத்திலே கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீமத் நாராயணனைத் தமது வழிபடுதெய்வமாயும். உபாசனாமூர்த்தியாயும்கொண்டு வாழ்ந்தார்கள். வல்லிபுரக் கோவிலின் தென் பாரிசத்திலே உள்ள அப்புக்காத்தர் மடத்திலே நீண்டகாலமாக வசித்து, ஒரு பெரிய தொண்டாற்றினார். வருவோரைவரவேற்று அவர்களின் வாழ்வைப்பற்றி எதிர்காலத்தைக் கணித்துக்கூறும் சிறந்த சோதிட ஆசானாகவும் திகழ்ந்தார்கள்.

இத்தலத்திலே நடைபெறும் விழாக்களிலொன்று கிருஷ்ண ஜெயந்தி. இவ்விழாவுக்கு கால்கோளிட்டவரும் செல்லையா சாது அவர்களே. பல வருடங்களாக ஆண்டுதோறும் கதிர்காமக் கந்தனிடம் கரை யாத்திரை செய்த பெரும்பேறுடையவர். நெடிய, மெலிந்த தோற்றம். வெண்மையான நான்கு முழமும், கீழும் இவருடைய ஆடை, எந்நேரமும் நீட்டும் நேசக்கரங்கள்.

இவ்வாறு நல்ல திருவருட் செல்வராய் வாழ்ந்த செல்லையா சாது அவர்களின் நினைவு நாள் இன்று அமைகிறது. இன்று இப் பெரியாரை நினைந்து சிறப்புவிழாவொன்று நடைபெறவிருக்கும் இத் தருணத்தில் மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

-ஓர் அன்பர்

## முழு அளவிலான

# பாரதி புத்தகக் கண்காட்சி கொழும்பில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

பாரதியார் சம்பந்தமான புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் உள்ளடக்கிய நிறைவானதொரு 'பாரதி புத்தகக் கண்காட்சி'யினை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதி நூற்றாண்டுவிழா தேசியக்குழுவின் அனுசரணையுடன் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் எதிர்வரும் டிசம்பர் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் ஈழத் தமிழ் எழுத்தாளரின் புகைப்படங்களும் எழுத்தாளர் தொடர்பான விவரணங்களோடு காட்சிக்கு வைக்கப்படும்.

இக்கண்காட்சிக்குத் தேவையான புத்தகங்களைச் சேகரிப்பதற்குப் புத்தகச்சேகரிப்பு நிலையமும், புகைப்படங்களைச்சேகரிப்பதற்கு புகைப்படச் சேகரிப்பு நிலையமும் முறையே பம்பலப்பிட்டி நாரஹேன்பிட்டி ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் இந்நிலைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தேவையான படிவங்களைப்பெற்று, விவரணங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படிதெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## கடமைமுடிந்து வீடு சென்றவரை

# வழிமறித்து சைக்கிள் கைக்கடிகாரம் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

கடமை முடிந்து சைக்கிளில் வீடு சென்றவரை இருவர் வழிமறித்துதாக்கிவிட்டு அவரது சைக்கிளையும் கைக்கடிகாரத்தையும் கொள்ளை அடித்துச் சென்றனராம்.

மானிப்பாயைச் சேர்ந்த பெரியதம்பி கனகரத்தினம் என்பவரே இக்கொள்ளைச் சம்பவத்துக்கு உட்பட்டவராவார்.

ஈவினையிலுள்ள நிறுவனம் ஒன்றில் லொறிசாரதியாகக் கடமையாற்றும் இவர் நேற்று

(7ம் பக்கம் பார்க்க)

# ஏழாலை கொலை: சந்தேக நபர் சரண்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கில் நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான அத்தயிடத்தைச் சேர்ந்த தம்பிராசா பாலசுந்தரம் (பெரியவா) என்பவர் சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரனிடம், சட்டத்தரணி சிறீதரன் மூலம் சரணடைந்துள்ளார்.

சந்தேகநபர் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் கொலைச் சம்பவம் நடந்த தினத்தன்று அணிந்திருந்த சாரமும், சேட்டும் பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி கே. குணரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, இம்மாதம் 12ம்திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குட்டித்தம்பி கணேஸ்வரன் (34 வயது) என்பவர் ஏழாலையில் வைத்து வெட்டிக்கொலை செய்யப்பட்டதும், இக் கொலைக்குப் பாவிக்கப்பட்ட தாகக்கருதப்படும் கத்தி ஒன்றையும் கொலை நடந்த மறுநாள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே.

(மா)


OPTIMATIC PICTURE CONTROL

என்ற அதிவிசேஷ அம்சத்தின் மூலம் காட்சிகளின் தனித்தன்மையைக் கண்டுகளிக்க இன்றே யப்பான் (JAPAN) நாட்டு உற்பத்தியான



சாப் கலர் டெலிவிஷன்களை

SHARP Colour TELEVISIONS

வாங்குங்கள்

கிடைக்குமிடம்:

ஈஸ்வர் கோப்பரேசன்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. எண்: 23308

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15 9-15
சனி, ஞாயிறு 2-30
அலாவுதீனும்
அற்புதவிளக்கும்

சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

மனோகரா [யாழ் நகர்]
9-10-82 —12-10-82
10-30 am, 2-15.4-45, 7-00, and 9-30
SPHINX
Color Scope

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ தினசரி 5 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
VAMPIRE CIRCUS

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வின்ஸர் குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

SANTHI (Jaffna) DAILY 5 SHOWS
DOM DE LUISE in
"HOT STUFF"
Action – Comedy – Color
15-10-82 "பாதை மாறிய பறவைகள்"

3-வது ஹவுஸ்புல் வாரம்!
றீகல் (யாழ். நகர்) தினசரி 10-30,2-30,6-15,9-30
ரஜனிகாந்த் — ர . — ஜெய்சங்கர் — சுருளிராஜன்
முரட்டுக்காளை
(கலர்)

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
இன்று மட்டும்
பணமா பாசமா
நாளை முதல் EYE WITNESS

ராஜா (யாழ்.நகர்)

ஹவுஸ்புல்! ஹவுஸ்புல்!!
ஹவுஸ்புல்!!!
மாதர் கூட்டம்
அலைமோதுகிறது
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன் வெள்ளிவிழாப்பட இயக்குநர் பாக்கியராஜ்

கிரிக்கெட் டெஸ்ட்

# மத்தியஸ்தரிடம் பொலிஸார் பணம்பறிக்க முயன்றனர்!

லாகூர் அக்.9

பாகிஸ்தானுக்கும் அவுஸ்திரேயாவுக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தில் மத்தியஸ்தராகக் கடமையாற்றிய கைஸர் ஹயட் என்ற பிரபல பாகிஸ்தானிய மத்தியஸ்தரிடம் லாகூர் பொலிஸார் மூவர் பணம் பறிக்க முயற்சித்தனர்.

இந்த சம்பவம், அவுஸ்திரேயாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே இடம்பெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் திரு ஹயட் கலந்துகொண்டுவிட்டு தமது சிநேகிதர் ஒருவரின் வீட்டுக்கு மோட்டார் ரிக்ஷாவில் சென்றுகொண்டிருந்தபோதே நடைபெற்றது.

இதுபற்றி தெரிவிக்கப்பட்டதாவது: திரு. ஹயட்டின் மோட்டார் ரிக்ஷாவை மறித்த மூவரும் அவரிடம் பணங் கொடுக்குமாறு வற்புறுத்தினராம். இதற்கு அவர் மறுக்கவே, இம்மூவரும் அவரைத் தாக்கத் தொடங்கினராம். இதனை அவதானித்த சில சிறுவர்கள் ஏன் அவரைத் தாக்குவதாக விசாரித்ததுடன் அவர் யாரென்பதையும் இம்மூன்று பொலிஸாருக்கும் எடுத்துக் கூறினர்களாம். இதனையடுத்து இம்மூவரும் திரு. ஹயட்டை அவ்விடத்திலிருந்தும் செல்ல அனுமதித்ததுடன், அவர்களும் அங்கிருந்தும் தப்பி ஓடிவிட்டனராம்!

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் ஏனையோர்கள் தேடப்படுகின்றனர். (கி)

## மாலினிக்கு பயமுறுத்தல்கள்

[கொழும்பு]

பிரபல சிங்கள திரைப்பட நடிகையான மாலினிபொன்சேகாவுக்கு அனாமதேய பயமுறுத்தல்கள் தொலைபேசிஅழைப்புக்கள் மூலமாகக் கிடைத்துள்ளன.

இதனை அடுத்து இவர் பொலிஸ் பாதுகாப்பினைக் கோரியுள்ளார் கோரிக்கையை அடுத்து கொழும்பிலுள்ள இவரது இல்லத்துக்கு காவல் போடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் மாலினி பொன்சேகா உட்பட பல சிங்கள திரைப்பட தாரகைகள் ஐ. தே. கவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டனரென்பது குறிப்பிடத்தக்கது. [இ]

"இடைநிலை படிப்பு முடிந்ததும்

# மாணவரை தேசியசேவையில் கட்டாயம் ஈடுபடுத்தவேண்டும்"

## சாவகச்சேரி இ. க. அதிபர் கருத்து

[சாவகச்சேரி]

"பெற்றோர் தம் பிள்ளைகளை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதையே தனி நோக்கமாகக் கொண்டுள்ளனர். மாணவர்களும் இரவு பகல் என்று பாராமல் அயராது கல்வி கற்கின்றனர். பெற்றோர் தம்பிள்ளைகளின் கல்விக்காகத் தம்பணத்தை வாரி இறைக்கின்றனர். பல்கலைக்கழகப் பிரவேசத்தில் ஆசிரியர், மாணவர், பெற்றோர் அயராது உழைக்கின்றனர். ஆனால் 4 சதவீத மாணவரே அனுமதி பெறுகின்றனர்."

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசளிப்புவிழாவில் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:–

"4 சதவீத மாணவர்களுக்காகவே கல்விக் கருத்தரங்குகளும் சீர்திருத்தங்களும் நடைபெறுகின்றன. மிகுதியான 96 வீதமும் மூன்று முறையும் ஒடிக்களைத்து, பின் தொழில் நுட்பக்கல்லூரிகளுக்குப் படையெடுத்துச்செல்கின்றனர் அங்கும் ஒரு சிலரே அனுமதிபெற முடிகின்றது. எஞ்சியோரிற் சிலர் சிறு தொழிற்கல்வியைப் பயின்று பின் தம் உடைமைகளையும் விற்றுத் தொழில் வாய்ப்புப் பெறத் தரகர்களிடம் பெரும்பணத்தைஒப்படைத்து அவர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர்.

"எனவே மாணவர்களின் ஆற்றலுக்கேற்ற கல்வி முறையைவகுத்துத்திறமைக்கு முதலிடம்கொடுத்து வழிநடத்தினால் வீடுகள்தோறும் வீதிகள்தோறும், வாகனங்கள் தோறும், கிராமங்கள்தோறும் நடைபெறும் சமூக விரோதச் செயல்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

"இளைஞர்கள் பலர் படித்தும் பயனற்ற நிலையிலே நாட்டுப் பற்றற்றவர்களாய், சமூகத் துரோகிகளாய், சமயக் கொள்கையற்றவர்களாய், பாரம்பரியத்தைப் பேணுதவர்களாய், ஜீவகாருண்யமற்றவர்களாய் வாழ்ந்துவரும் நிலை ஏற்படுகிறது. பாடசாலைகளில் பஞ்சமாபாதகங்களைக் களைந்து தெறியவேண்டுமெனப் படிக்கின்றனர். பின்பு அவற்றைப் பழகிப் பாண்டித்தியம் பெறுகின்றனர்.

"இவற்றைத் தடுப்பதற்கு மாணவர்களை இடைநிலைப் படிப்புமுடிவுற்றதும் ஓராண்டு அல்லது ஈராண்டு தேசிய சேவையில் கட்டாயமாக ஈடுபடுத்த வேண்டும். சமயக் கொள்கைகளைச் செயலிற் காட்டவேண்டும். அப்பொழுது அவர்கள் தேசப்பற்றுடைய நல்ல சமூகத்தினராய் உருப்படுவர்.

"எனவே கல்விச் சீர்திருத்தப் பாதையில் மாணவர்களை ஆற்றுப்படுத்தி நாட்டிலுள்ள கொந்தளிப்பு நிலைக்குத் தீர்வு காண்பது இன்றியமையாதது."

வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கே. சோமசுந்தரமும் ஆசியுரை வழங்கினார். திருமதி எம். சிமியார்பிள்ளை வெற்றி பெற்றோருக்குப் பரிசில் வழங்கினார். [க]

## யாழ். விளையாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1980ம் ஆண்டு 100 மீட்டர் தடைதாண்டி ஓட்டத்தில் இலங்கை சாதனையொன்றை நிலைநாட்டியபின் இங்கிலாந்து சென்றிருந்த செல்வகௌரி வரதகுமார் அங்கு பிரபல்யம் வாய்ந்த மெய்வல்லுநர்பயிற்சியாளரிடம் சிறந்த பயிற்சி பெற்றார்.

சமீபத்தில் இலங்கை வந்த இவர் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தெரிவுப் போட்டியில் பங்கு பற்றி 100 மீட்டர் தடை தாண்டி ஓட்டத்தை 14.9 செக்கனில் ஓடி புதியஇலங்கை சாதனைஒன்றை நிலைநாட்டியுள்ளார்

இப்போட்டிக்கான முன்னைய சாதனையும் இவருடையதாகும். அது 15 6 செக்கனாகும்.

தடைதாண்டிஓட்டத்துடன் மற்றும் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் போட்டிகளிலும் இவர் இன்று கலந்து கொள்வார்.

இன்று நடைபெறும் போட்டியில் சுரேஷ் அல்பிரட், கனகராஜா, இம்மானுவல், சண்முகம்பிள்ளை, தேவராஜா, ஜெயக்குமார், ராஜேந்திரன், தியாகராஜா போன்ற விளையாட்டு வீரர்களும், மாலினி, ஜெயந்தி, ரோகினி, சுகுணா, சுலோஜனா, வராகினி போன்ற விளையாட்டு வீராங்கனைகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ், பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஏ. இ. ஆனந்தராஜா கலந்து கொள்வார்.

திருமதி எஸ். ஏ. ஆனந்தராஜா பரிசில்களைவழங்குவார்.

இப்போட்டிக்கான ஒழுங்குகளை யாழ். அமெச்சூர் விளையாட்டு சங்கத்தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கமும் அவரது குழுவினரும் மேற்கொண்டுள்ளனர். (வெ)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி முடிவுகள்.

[பண்டத்தரிப்பு]

அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசகர் மன்றத்தின் 10வதுண்டு ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட யாழ். மாவட்ட ரீதியிலான மாட்டுவண்டில் சவாரிப்போட்டியில் ஏ. பி. சி. பிரிவுகளில் முதலிடம் பெற்றவர்கள் பின்வருமாறு–

ஏ. பிரிவு:– இ. திருநாவுக்கரசு, பண்டத்தரிப்பு. பி பிரிவு து. செல்வராசா, சுன்னாகம், சி. பிரிவு– நா. சின்னராசா. ஆவரங்கால். (வெ)

## விக்டோறியா....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானத்துக்கு ஒருவர், கலை வர்த்தகப பிரிவுகளுக்கு நால்வர் ஆகிய எல்லாப்பிரிவுகளுக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வழிமறித்து...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

முன்தினமிரவு பத்துமணியளவில் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்ததாகவும் அப்போதுமயனிப்பாய் ஈவினை வீதியில் பற்றைக்குளளிலிருந்த இருவர் திடீரென வழிமறித்து சைக்கிள் செயினாலும், டோர்ச்லைட்டாலும் தாக்கிவிட்டு சைக்கிளையும். கைக்கடிகாரத்தையும் கொள்ளை அடித்துக்கொண்டு நிலாவரை நோக்கி ஓடியதாகவும் சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுளது.

சுன்னாகம்பொலிசை சேர்ந்த சார்ஜண்ட் எஸ். சிவலிங்கம், பொலிஸ்கான்ஸ்டபிள்கள் இ. கந்தசாமி, ரி. குணசிங்கம்ஆகியோர் விசாரணை செய்து வருகின்றனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (மா)

## ஆலோசனைக் கூட்டம்

(மன்னார்)

மன்னாரில் அடிக்கடி நடைபெற்று வரும் திருட்டுக்களை ஒழித்துக்கட்டுமுகமாக கடை வீதி, வர்த்தகர்கள், தொழிற்சாலை அதிபர்கள், பொலிஸ் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. இராசையா தலைமையில் நடைபெறவிருக்கிறது. (க)

### ✱ முதல் இரண்டு வாக்குகளில் ஒன்றை

# கொப்பேகடுவவுக்கு வழங்க சுயாட்சிக்கழகம் கோரிக்கை!

[யாழ்ப்பாணம்]

''ஜனாதிபதித் தேர்தலில் இன்றையஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளரைத் தோற்கடிக்கமுடியும் தமிழ் மக்கள் தமது முதல் இரண்டு வாக்குகளில் ஒன்றை வெற்றிபெறக்கூடிய அபேட்சகரான சிறீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருக்குக் கொடுத்து ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரின் தோல்வியை நிச்சயப்படுத்த வேண்டும்''.

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழர் சுயாட்சிக் கழகப் பொதுச்செயலாளர் திரு.செ. கோடீஸ்வரனால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளதாவது:-

''நடைபெறப் போவது ஸ்ரீலங்காவிற்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல். இத்தேர்தலில் தமிழ் இலங்கை மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்ட தென்றோ அல்லது தமிழ்மக்கள் ஒரு மனதாக இத்தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள் என்ற நிலையோ தோன்றப்போவதில்லை.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் நடக்கப்போவது என்ன? பகிஷ்கரிப்பவர்களுடைய வாக்குகள் யாவும் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டுப் பதிவாகமாட்டாது என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லை. கடந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் என்ன நடைபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் தேர்தலைப் பகிஷ்கரிப்பது எதிரிக்கு விட்டுக்கொடுப்பதாக அமையும் என்றே தமிழர் சுயாட்சிக்கழகம் கருதுகின்றது. எமக்குத் தரப்பட்டுள்ள வாக்குரிமை என்ற ஆயுதத்தை எமது சார்பில் பிறரை உபயோகிக்கவிடாமல் நாமே பிரயோகிக்க வேண்டும் என்று கழகம் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு குமார் பொன்னம்பலம் தமிழ் ஈழத்திற்கு அங்கீகாரம் கோரிப் போட்டியிடுகின்றார். இத்தேர்தல் தமிழ் மக்களிடையே தமிழ் ஈழத்தில் நடைபெறவில்லை தமிழீழக்கோரிக்கையை ஆதரிக்கும் அமைப்புக்களின் ஆதரவையும் முன்கூட்டியே பெறாது திரு. குமார் பொனனம்பலம் போட்டியிடவில்லை.

### இலட்சியம் பலவீனமாகிறது

இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் ஈழ கோஷத்தினால் புனிதமான தமிழ்ஈழ இலட்சியத்திற்கு எந்த விதத்திலும் உதவி புரிவதாக அமையாது. மாறாக, அந்த இலட்சியத்தைப் பலவீனப்படுத்துவதாகவேமுடியும்.

எமது இழந்த உரிமைகளில் ஒன்றைக்கூட எந்தச் சிங்களக் கட்சியும் எமக்கு வழங்க முன்வரும் என்ற நம்பிக்கையோ, நப்பாசையோ எமக்குக் கிடையாது இந்த நிலையில் இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கும், தமிழ் மக்களின் இலட்சியத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆனால் எமது வாக்குரிமை என்ஒரே ஒரு நோக்கத்திற்காகவாவது இந்த தேர்தலை நாம் பாவிக்கவேண்டும்.

1947ல் இருந்து இன்று வரை ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகள் யாவும் ஏதோ ஒரு வழியிலாவது தமிழினத்தின் வலிமையைக் குறைக்கவும், அழிக்கவும்செயல்பட்டேவந்திருக்கின்றன. ஆனால் இன்றைய அரசைப்போல வேறு எந்த அரசும் பலாத்காரத்தினால் தமிழ் இனத்தைப் பயமுறுத்தி பயங்கரவாதத்தினால் அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுத்தது கிடையாது.

1977லும் 1981லும் தமிழ் மக்களுக்கு எதிராக நடர்த கலவரங்களை தடுத்து நிறுத்த தவறிய முழுப் பொறுப்பும் இந்த அரசாங்கத்தினுடையது.

### தார்மீக அரசின் மனச்சாட்சி

புலிகளைத் தேடிப் பூண்டோடு அழிக்குமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் விடுக்கப்பட்ட கட்டளையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டபின் காணாமலே போய்விட்ட இளைஞர்கள் வீதியோரங்களில் வீசப்பட்டுக்கிடந்த இன்பம், செல்வரத்தினம் போன்றோரது பிணங்கள் இந்தத் தார்மீக அரசாங்கத்தின் ஆட்சியின் மனித நீதிக்கும் மனச்சாட்சிக்கும் உள்ள மதிப்பு என்ன என்பதை புட்டுக்காட்டப் போதுமான ஆதாரங்களாகும்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது தீ வைத்துக் கொளுத்தப்பட்ட பொது நூலகம், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு யோகேஸ்வரனின் சாம்பலாக்கப்பட்ட வீடு, கொள்ளையடிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் எல்லாவற்றிற்கும் மேலாகச் சுட்டுக் கொல்லப்பட்ட பத்துஅப்பாவித் தமிழ்ச் சகோதரர்கள்.... இத்தனையும் என்றும் எம் ஞாபகத்தை விட்டகல முடியாதவை.

இறுதியாக, சர்வதேச அமைப்புக்கள் பலவற்றின் பலமான கண்டனத்திற்கு ஆழாகியிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எதிரிகளினால் ''அளிக்கப்பட்ட'' ஒப்புதல் வாக்கு மூலங்களையும் சாட்சியமாக அனுமதித்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில் குட்டிமணி, ஜெகன் ஆகிய இரண்டு இளைஞர்களுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பல இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இராணுவ முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

### சுதந்திரக்கட்சி வேட்பாளருக்கு

ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து நிற்கும் நாலு சிங்கள வேட்பாளர்களிலும் தமிழினத்தின் உரிமைகளை வலியுறுத்தும் ஒரேயொருவர் நவ சமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார மட்டுமே. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரை எதிர்த்துத் தோற்கடிக்கும் வலிமையும் வாய்ப்பும் அவருக்கு இல்லை அந்த வாய்ப்பு உள்ளவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்மாத்திரமே.

எனவே தான் தமிழ் மக்கள் அனைவரும் தமது மூன்று வாக்குகளையும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிராக போட்டியிடும் வேட்பாளர்களுக்குமே அளிக்கவேண்மென்று தமிழர் சுயாட்சிக்கழகம் தமிழ் மக்களை வேண்டுகின்றது. ஜனாதிபதிஜெயவர்த்தனவை தோற்கடிக்கக்கூடிய வாய்ப்பு ஸ்ரீலங்கா சதந்திரக் கட்சி வேடபாளருக்கே இருப்பதால் தமிழ்மக்கள் தமது முதல் இரண்டு வாக்குகளில் ஒரு வாக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருக்கு தவறாமல் அளித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தோல்வியை நிச்சயப்படுத்தவேண்டுமென தமிழர் சுயாட்சிக்கழகம் மேலும் வேண்டிக்கொள்கின்றது.

(வண். நிரு)

## அடக்குமுறை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திவரும் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன மீண்டும் ஜனநாயக முறையைப் பாவித்து தமக்கு வாக்களிக்கும்படி கேட்கிறார். நீங்கள் அவருக்கு ஜனாதிபதி பதவியைக் கொடுக்கப் போகிறீர்களா''? என்று ஜனாதிபதி தேர்தலில் இலங்கை சமசமாஜக்கட்சி சார்பில் அபேட்சகராகப் போட்டியிடும் கலாநிதி கொல்வின் ஆர் டி. சில்வா, யாழ். திறந்தவெளியரங்கில் நேற்றுமாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.

ஓரேட்டர் சி. சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கலாநிதி கொல்வின் தொடர்ந்து பேசுகையில் சர்வாதிகார ஆட்சியை ஒழிந்து இன, மத, சாதி,பேத அடக்கு முறை நீக்கப்படவேண்டும்.

''மாவட்டஅபிவிருத்திசபை தேர்தலின்போதுயாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் நடந் கொண்ட மோசமான தந்திரோபாயங்களுக்கு, நீங்கள் கையாண்ட முறையை அதாவது ஒருங்கு திரண்டு உங்கள் அபேட்சகர்களைத் தெரிவு செய்ததுபோல் இத்தேர்தலையும் பகிஷ்கரிக்காமல் உங்கள் வாக்குகளை அளியுங்கள்'' என்றார்

திருமதி விவியன் குணவர்த்தனவும் பேசினார். (மா)

## வாக்களிக்க---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தன்று வாக்களிப்பு ஒழுங்கான முறையில் நடைபெறவும், வாக்களிப்பு முடிந்த பின்னர் அமைதியும், ஒழுங்கும், கட்டுப்பாடும் பேணிப்பாதுகாக்கப்படவேண்டுமென்ற நோக்கிற்கிணங்க பாதுகாப்பு நடவடிககைகளை தேர்தல்களுக்குப் பொறுப்பாகவுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கொண்டுள்ளார்

வாக்களிப்பு நேரத்தில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்வர், அதன்பின்னர் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாதவகையில், முப்படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

வாக்களிப்பின்போது, வாக்களிக்க விருப்பம் கொண்டுள்ளவர்களை தடுத்து நிறுத்த முயன்றால், பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வார்கள். இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டால் பொலிசார் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### பங்களாதேஷில் வாந்திபேதி

# 72 பேர் பலி!

## ஜீவமரணப்போராட்டம் தொடர்கிறது!!

டாக்கா, அக் 9

பங்களாதேஷின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாந்திபேதி நோய் காரணமாக கடந்த இருவாரங்களில் 72 பேர் உயிரிழந்துள்ளனர் தலைநகரான டாக்காவில் மட்டும் கடந்த சில தினங்களில் 43 பேர் பலியாகியுள்ளனரென்று தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷில்வாந்திபேதி நோய் மேலும் பரவாமலும் பாதிப்படைந்தோருக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டும் அமெரிக்க டாக்டர்கள் குழுவொன்று இங்கு வந்துள்ளது இக்குழுவிலுள்ள டாக்டரொருவர் வாந்திபேதி நோய் பீடித்த நூற்றுக்கு மேற்பட்டோர் உயிருக்காகப் போராடுவதை தாம் நேரில் கண்டதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டாக்டர்களின் உதவியுடன் விரிவான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருப்பதை யடுத்து இன்னும் ஒருவாரகாலத்தில் வாந்திபேதி நோய் அபாயத்தை நீக்கி விடலாமென்று பங்களாதேஷ் சுகாதார அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (கி)

### யாழ். மாவட்டத்தில்

## பலத்த பாதுகாப்புடன் நடந்த பௌதிக பரீட்சை

[யாழ்ப்பாணம்]

பலத்தபாதுகாப்பின் மத்தியில் ஜி. சீ. ஈ.உயர்தர பௌதிகவியல் பாடப்பரீட்சை யாழ். மாவட்டத்திலுள்ள 52 பரீட்சை நிலையங்களிலும் தலா இரண்டு பொலிசார் வீதம் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். இடையிடையே இராணுவத்தினர் பரீட்சை நிலையங்களுக்கு வெளியில் பாதுகாப்பளித்த போதிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுநடைபெற்ற இப்பரீட்சையில் 53 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

கடந்த ஆகஸ்ட் 20-ம் திகதி இப்பரீட்சை நிலையங்களில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்தே இப்பரீட்சை மீண்டும் நேற்று நடைபெற்றது. [மா]

## இன்று

[யாழ்ப்பாணம்]

தமிழீழவிடுதலை அணியின் செயற்குழுக்கூட்டம் இன்று ஞாயிறு நடைபெறவுள்ளது.

தமிழீழவிடுதலை அணி தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் அவரது இல்லத்தில் கூடும் செயற்குழு இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராயும். [மா]

## செல்வகௌரி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யர்களை மகிழ்விக்கவிருக்கிறார்.

இன்று பிற்பகல் யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ள யாழ். அமைச்சூர் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியிலேயே திருமதி செல்வகௌரி கலந்து கொள்கிறா.

(7-ம் பக்கம் பார்க்க]

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

வடமாகாண தேசிய அரசாங்க சேவை பொது ஊழியர் சங்க சம்மேளனக்கருத்தரங்கு இன்று ஞாயிறு காலை நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி மத்திய குழு உறுப்பினர் திரு. ஆர். ஆர். நல்லையா வரவேற்புரை நிகழ்த்துவார்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹமத் ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் திரு என். ஜி பி பண்டிதரத்ன மேற்படி சம்மேளன செயலாளர் டக்ளஸ் பெரேரா வட பிராந்திய செயலாளர் திரு. பி. மரியதாசா ஆகியோர் உரைநிகழ்த்துவர். [மா]

## இருவர் பலி

[கொழும்பு]

தெமட்டகொட பேர்ஸ் லேன்வீதியில் ஓட்டோரிக்ஷோவும் பஸ்ஸும் மோதிக்கொண்ட போது இருவர் மரணமானார்கள். (இ-வெ)


## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா பொன்னுத்துரை

திரு. கந்தையா பொன்னுத்துரை காலமானர். இவர் புஷ்பராணியின் அன்புக்கணவரும் பஞ்சாட்சரம், புஷ்பமலர், புஷ்பவதி, திலகவதி, கமலாவதி ஆகியோரின் தந்தையும் எஸ் மகாலிங்கம் யாழ்.மாநகரசபை) தி. மைக்கல் [கட்டடத் திணைக்களம், வவனியா), டாக்டர் நா. சண்முகநாதன்(வசாவிளான்) அ. அருள் நேசதுரை ஆகியோரின் மாமனும்; N. T. செல்லத்துரை யாழ். மாநகரசபை உறுப்பினர்), நா. தம்பிமுத்து (ரவர் கூல் பார்), சி. ஆறுமுகம், க. திரவியம் ஆகியோரின் மைத்துனரும் எஸ். கனகம்மா, த. நேசம்மா, ஆ. பூமணி, தி யோகம்மா, க. விஜயரத்தினம்ஆகியோரின் சகோதரரும்டாக்டர் த. இராஜகுலேந்திரன்(லண்டன்) த. மகேந்திரராஜா. த. சற்குணராஜன் லண்டன் தி ரவீந்திரன், ஆ. குணசீலன் (பல்கலைக்கழகம்) ஸ்ரீ தேவராஜலிங்கம் ஆகியோரின் தாய்மாமனுமாவார், அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 10-10-82) பி. ப. 3 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

4805


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் • யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.